81

# பகுத்தறிவு

கழக வார இதழ் ஆசிரியர்:- ப. கண்ணன்

மலர் 6 | சேலம் 16-11-56 ★ விலை அணா ஒன்று. | இதழ் 20

81
1-57

## கலகமும் குழப்பமும் செய்தவர்கள் யார்?

"தமிழ்நாடு" என்று கூறிட வெட்கப்படும் "மதராஸ் நாட்"டின் அமைச்சர் பெருமக்களினம் காமராசர், சுப்ரமணியம், பக்தவத்சலம் மூவரும் தேர்தல் பிரசாரத்தில் மும்முரமாக ஈடுபட்டு விட்டனர். திராவிட முன்னேற்றக் கழகத்தை நரம்பற்ற நாக்கினர்போல்பேசத்தொடங்கிவிட்டனர். இந்த உண்மையற்ற—உரமற்ற நெஞ்சினர்!

அரசாங்கச் செலவிலே—பொதுமக்களின் வரிப்பணத்திலே—தம் கட்சியின் தேர்தல் பிரசார வேலை நடத்துகின்ற இந்த தியாகமூர்த்திகள், பேச்சிலாவது தரம் காட்ட வேண்டாமா? பதவியின் பொறுப்பினை—கண்ணியத்தைக் காப்பாற்ற வேண்டாமா?

"தேர்தல் என்பதே பித்தலாட்டம். பணம் படைத்தோரின் சூதாட்டம், பொய் புனைசுருட்டு பேசி பொதுமக்களை ஏமாற்றத் தெரிந்தனே கெலிப்பான். அரசியல் என்பதே அயோக்யர்கள் வேலை" என்ற பெரியார் ஈ. வே. ரா. அவர்களின் கூற்றுக்கு எடுத்துக்காட்டாக செயற்படுகின்றனர் போலும் ஆளுகின்ற அமைச்சர்கள்! இல்லையெனில், மட்டரகமாகப் பேசுவானேன்? மக்களிடையே வெறுப்பையும், கொதிப்பையும் விளைவிப்பானேன்?

திருச்சியில் இவர்கள் பேசிய கூட்டத்தில் கலவரம் ஏற்பட்டதாகவும், கூட்டம் இடையிலே கலைந்து, போலீஸ் உதவியோடு காரில் ஏறும்படி நேர்ந்ததென்றும் பத்திரிகைச் செய்திகள் வந்தன. இதனை வெளியிட்ட காங்கிரஸ் ஏடுகளே, மந்திரிகள் தி. மு. க. வை கடுமையாகத் தாக்கிப் பேசினர் என்றும் கூறின. ஆனால், கேள்விகேட்டவர்கள், கலவரம் செய்தவர்கள் தி. மு. கழகத்தாரல்ல.

இதுகுறித்து விசாரித்தறிந்த தி. மு. க. தலைமை நிலையம ஒரு அறிக்கையில் கூறுகின்றது:

அண்மையில் திருச்சியில், முதலமைச்சர் காமராசரும், பிறரும்பேசிய காங்கிரஸ் கூட்டம் ஒன்றில் குழப்பம் ஏற்பட்டதாகவும், அக் குழப்பத்திற்குக் காரணம் திராவிடமுன்னேற்றக் கழகத்தினர் என்றும் சில செய்தித் தாள்கள் வெளியிட்டுள்ளன.

திருச்சியிலுள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தை விவரம் கேட்டதில், அக்குழப்பத்திற்கும், கழகத்திற்கும் சிறிதும் சம்பந்தமில்லை யென்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளனர்.

பொதுவாக திராவிட முன்னேற்றக் கழகத்தைப்பற்றி இழித்தும் பழித்தும் பேசுவதைப்பற்றி நம் கழகத்தோழர்கள் பொருட்படுத்தவில்லை யென்பதை அனைவரும் அறிவர். கழகத் தோழர்கள் அந்தக் கண்ணியத்தைக் கடைப்பிடித்து வரும்போது அதற்கு மாறான செய்திகளை வெளியிடும் செய்தித் தாள்களின் போக்கு மிகவும் கண்டிக்கத்தக்கதாகும்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

தேர்தலுக்கு முன்பே இல்லாதனவும், பொல்லாதனவும் கூறிப் பழிசுமத்துகின்ற காங்கிரஸ் ஏடுகள், தேர்தல் நடக்கின்ற நேரத்திலே எப்படி நடந்துகொள்ளும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும் நமது தோழர்கள். எச்சரிக்கை வேண்டும்; ஏற்ற முறையில் நடந்து கொள்ள வேண்டும்.

திராவிடத் தந்தை பெரியார் இந்தத் தேர்தலில், சனநாயக முறையிலேஒரு விசித்திர நிலையை உண்டாக்க விரும்புகிறார். "தேர்தலில் இரண்டே கட்சிகள் தான். ஒன்று காமராசர் கட்சி; மற்றொன்று ராஜாஜி

(8-ம் பக்கம் பார்க்க)

# தமிழ்நாட்டு வானொலி நிலையங்களிலே...

ஆந்திரர்களுக்கென்று விசயவாடா நிலையமும், மலையாளிகளுக்கென்று திருவனந்தபுரமும், கோழிக்கோடு நிலையங்களும், கன்னடியர்களுக்கென்று பெங்களூரும் இருப்பதால் தமிழர்களுக்கென்று திருச்சி நிலைய நிகழ்ச்சிகள் அனைத்தும் தமிழிலேயே இருத்தல் வேண்டும். அந்தப்பகுதியில் அமைந்துள்ள வானொலி நிலையங்கள், அந்தந்தப் பகுதி மொழியிலேயே மக்களுக்கு நிகழ்ச்சிகளைத் தயாரித்து ஒலிபரப்ப வேண்டுமென்ற மக்கள் விருப்பத்தைப் புறக்கணிக்க முடியாது. இந்த வகையில் மேற்கூறிய மற்றப் பகுதி நிலையங்கள் எல்லாம் அந்தந்தப் பகுதி மொழிகளிலேயே எல்லா நிகழ்ச்சிகளையும் தயாரித்து வருகையில், நம் திருச்சி நிலையம் மட்டும் ஏன் தமிழுக்கு முழு இடம் அளிக்காமல், கதம்பமாக நிகழ்ச்சிகளை ஒலிபரப்பவேண்டும்? மற்றவர்களைப் பார்த்தாவது திருச்சி நிலையம் தனது தற்போதைய கொள்கையை மாற்றிக்கொண்டு, தமிழுக்கே முழு இடம் அளிக்க முன்வந்தாலன்றி தமிழ்நாட்டு மக்களின் நன்மதிப்பையும், ஆதரவையும் பெற முடியாது. ஆகவே, திருச்சி நிலைய அதிகாரிகள் உடனடியாக இதைக் கவனித்துத் தக்க நடவடிக்கைகள் எடுத்தாக வேண்டும்.

இந்த நியாயமான கோரிக்கையை வற்புறுத்தும்போது, பிறமொழி வெறுப்புக் கூடாதென்று அதிகாரிகளால் ஒரு சமாதானம் கூறப்படுகிறது. பெரும்பாலான அளவுக்கு தமிழ்ப் பாடல்கள் ஒலிபரப்பப் படுகிறதென்கிறார்கள். வானொலிப் புத்தகத்தைக்கொண்டு பார்த்தால், 100-க்கு 50 அல்லது 60 பாடல்கள் தமிழாக இருப்பதையும் காண்கின்றோம். என்றாலும், மற்ற பகுதி நிலையங்களில் 100-க்கு ஒரு பாடலாவது தமிழ் இருப்பதாகத் தெரியவில்லை. இந் நிலையில், நமது திருச்சி நிலையம் மட்டும் மற்ற பகுதி மொழிப் பாடல்களுக்கு இவ்வளவு முக்கியத்துவம் அளிப்பது பொருந்தாது. தமிழ்நாட்டு மக்களுக்கும் மற்ற பகுதி மக்களைப் போலவே மொழிப் பற்றும் உணர்ச்சியும் உண்டு. ஆகையால் திருச்சி நிலையம் தமிழுக்கு முக்கிய இடம் கொடுத்துவிடுவதால் மட்டும் மனநிறைவு அடையமுடியாது. மற்ற நிலையங்களைப்போல் இங்கும் தமிழுக்கு முழு இடம் அளித்தால்தான் மனநிறைவு அடையமுடியும்.

### கண்ணைத் துடைக்கக் கையாளப்படும் வழி

மேலும் தற்போது 100-க்கு 60 பாடல்கள் தமிழாகவே திருச்சி நிலையத்தில் ஒலி பரப்புவதாகக் கூறுவதிலும், சில முக்கிய அம்சங்கள் கவனிக்கப்பட வேண்டியிருக்கிறது. முழுநேரக் கச்சேரிகளில் எல்லாம் தெலுங்குதான் அதிகம் இடம் பெறுகிறது. வாய்ப்பாட்டுக் கச்சேரிகளில்எல்லாம் தெலுங்குப் பாடல்களை அதிகமாகவும், பெயருக்கு இரண்டொரு தமிழ்ப் பாடல்களை மட்டும் போட்டுவிட்டு, வாத்தியக் கச்சேரிகளிலேயே தமிழ்ப் பாடல்களை அதிகம் சேர்த்து வருகிறார்கள். இது தமிழ் மக்களின் கண்ணைத் துடைப்பதற்குக் கையாளப்படும் ஒரு சூழ்ச்சியே தவிர, உண்மையில் தமிழுக்கும் தமிழ்ப் பாடல்களுக்கும் உரிய முறையான மதிப்புக்கொடுப்பதாகாது என்பது ஊன்றிப் பார்க்கும் யாருக்கும் எளிதில் புலனாகாமற் போகாது. எனவே, மேற்கூறியபடி தமிழ்நாட்டு நிலையத்தில் தமிழுக்குத்தான் முழு இடம் இருக்கவேண்டும் என்ற நிலை ஏற்பட்டால்தான். நிகழ்ச்சி அமைப்பாளர்கள் செய்யும் இத்தகைய சூழ்ச்சிகளுக்கு இடமில்லாது போகும். தமிழுக்கு உண்மையான மதிப்பு ஏற்படும். தமிழ் மக்களுக்கும் பூரண மனநிறைவு ஏற்படும்.

மற்றும் ஒன்று. திருச்சி நிலையத்தில் ஒலிபரப்பாகும் தமிழ்ப்பாடல்களில் என்றைய ஒரு குறிப்பிட்டநாள் நிகழ்ச்சியை எடுத்துப்பார்த்தாலும், அதில் வரும் பாடல்கள் திரும்பத் திரும்ப சுத்தானந்த பாரதி, பாபநாசம் சிவன், நீலகண்ட சிவன், கோபால கிருஷ்ண பாரதி இவர்களுடையதாகவே இருக்கின்றன. பாடகர்களும் தமிழர்களைவிட ஒருசாராரே அதிகமாக இடம்பெற்று வருகின்றனர். முத்துத்தாண்டவர், மாரிமுத்தாப்பிள்ளை, வேதநாயகம்பிள்ளை, பாரதிதாசன், கே. எம். பாலசுப்பிரமணியம், இலட்சுமணபிள்ளை, தஞ்சை பொன்னையா பிள்ளை மற்றும் தற்கால இளம் கவிஞர்கள் என். எஸ் சிதம்பரம், திருச்சி ஜி. தியாகராசன், கு. ச. கிருஷ்ணமூர்த்தி போன்ற பலர் எத்தனையோ பாடல்கள் இயற்றியிருக்கிறார்களே. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும் தமிழ்ப்பாடல்தொகுதிகள் சுரதாளக் குறிப்புகளுடன் 15-க்கு மேல் வெளியிடப் பட்டிருக்கிறதே; இவற்றையெல்லாம் நிகழ்ச்சிகளில் மிக அரிதாக ஒன்றிரண்டுமட்டும், சேர்த்து சுத்தானந்த பாரதி, பாபநாசம் சிவன் பாடல்களையே ஏன் அதிகமாகத் திரும்பத் திரும்பச் சேர்க்க வேண்டும்? இந்நிலையும் உடனடியாக மாறி எல்லோரது பாடல்களுக்கும் சம வாய்ப்புகள் அளிக்கப்பட வேண்டும். தமிழ்ப்பாடகர்களுக்கும் நிலைய நிகழ்ச்சிகளில் அதிக வாய்ப்பு அளிக்கவேண்டும்.

திருச்சி நிலையத்திலிருந்து கலைஞர்களுக்கு அனுப்பப்படும் ஒப்பந்தச் சீட்டுகளில் முன்பு "முக்கியமாகத் தமிழ்ப் பாடல்கள்" என்று ஒரு நிபந்தனை விதிக்கப்பட்டிருந்தது. தற்சமயம் அந்த நிபந்தனை நீக்கப்படக் காரணம் தெரியவில்லை. மீண்டும் அந்த பழைய நிபந்தனை ஏற்பட்டு, அதுவும் சரியானபடி அமுல் நடத்தப்பட்டாலன்றி இப்போதைய சூழ்நிலை மாறுவதற்கே இடமில்லாது போய்விடும்.

### சென்னை நிலையமும் கவனிக்க வேண்டும்.

சென்னை வானொலி நிலையமும் தமிழ்நாட்டில் அமைந்திருக்கும் காரணத்தால், அங்கு ஒலிபரப்பாகும் பாடல்களிலும் 100-க்கு 80 சதவிகிதமாவது தமிழாகவே இருக்கவேண்டும். சென்னை நிலையத்தில் இரண்டு ஒலிபரப்பிகள் இருப்பதால் ஒன்றைப்பூரணமாக தெலுங்குக்குப் பயன் படுத்திக்

(9-ம் பக்கம் பார்க்க)

## எதிரொலி

நேருவை யாராலும் அசைக்க முடியாது.

—பெரியார்.

முதலில் காமராசர், இப்போது நேரு; பிறகு காங்கிரசை அசைக்க முடியாது என்பாரோ?

* * *

நமக்குள்ளிருக்கும் வேற்றுமைகள் மறைய, புத்தரது உபதேசம் நமக்கு பெரும்வழிகாட்டியாகஇருக்கவேண்டும்.

—சர். ராதாகிருஷ்ணன்.

புத்தர் விஷ்ணுவின் அவதாரம் என்பதை அகாராரம விட்டால்தானே அது நடக்கும்!

* * *

ஐந்தாண்டுத் திட்டம் பற்றி சிறந்த நாடகம் எழுதுவோர்க்கு அரசாங்கம் 1000 ரூபா பரிசு கொடுக்கும்.

—செய்தி.

அதிலே "மாட்டுக்கு ஓட்டுப் போடுங்கள்" என்று சிறந்த பாட்டும் இருக்க வேண்டுமே!

* * *

குடந்தை கோயில்களிலே அதிசயத் திருட்டு.

—செய்தி.

பாவம், அந்தத் திருடன் என்ன பிரார்த்தனை வைத்துக்கொண்டானோ!

* * *

மூக்குக் கண்ணாடி, காமிரா தயாரிக்கும் தொழிற்சாலைகள் தென்னாட்டில் ஏற்படுத்தப் படும்.

—செய்தி

அந்தக் கண்ணாடி மூலம் வடநாட்டு வஞ்சனையைப் பார்க்கவோ, காமிரா மூலம் படம் பிடிக்கவோ முடியுமா?

* * *

மலையாளி பிரின்சுபாலை எதிர்த்து சேலம் கல்லூரி மாணவர் கிளர்ச்சி.

—செய்தி

பிறகென்ன? அக்ரமம் செய்பவரைக் கண்டிக்க ஆண்டவனே அவதாரம் எடுக்கப் போகிறான்?

புத்தர் நெறி

# மெய்யின்பம்!

பி. வி. இராமசாமி

மாரிக்காலம், புத்தர்பிரான், நாருகா வனத்திலே தங்கியிருந்தார். அப்போது அடியார்கள் வந்து வணக்கம் தெரிவித்தனர். வினவினர், மத வாழ்க்கை என்பது என்ன என்பதாக.

அன்புநெறிப் பிரான் சொன்னார். அப்போது:—

உலகம் நித்தியமா? அநித்தியமா?—ஆத்மாவும் மதமும் ஒன்றா? வெவ்வேறா? செத்தபின் பிழைத்திருக்கின்றனரா என்று ஆராய்ந்து கொண்டிருப்பதல்ல உண்மை மதம். இவற்றை ஆராய்ந்து கொண்டிருப்பதால் கிடைக்கும் பலன் யாதொன்றுமில்லை. அறநெறி (தர்மம்) என்பதற்கும் இவற்றிற்கும் தொடர்பே கிடையாது.

மனிதர்களுடைய, துக்கம், துயரம், ஆசை ஆகியவற்றை இவைகள் நீக்கா. நல்லறிவும், நல்வாழ்வும், செயலறிவும், நற்பண்பும், மெய்யின்பமும் இவற்றால் பெற முடியாது.

அறிவுக் கண்ணில்லாதவர்கள் உண்மையில் குருடர்களே. சுகபோகங்கள் என்பனவற்றிற்கு இடையில் கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டால் அந்த சுகபோகங்கள் முடிவெய்திவிடும், இளமைக்கு முதுமை முடிவு; அன்புக்கு இழப்பிலே முடிவு.

உலகம் நித்தியமா, அநித்தியமா என்று ஆராய்ந்து கொண்டிருப்பது, கடுங்கானகத்திலே எதையோ தேடித் திரிந்துகொண்டிருப்பது போன்றதாகும்.

ஒரு விளக்கம்:—

விஷ அம்பு பாய்ந்து விட்டது ஒரு மனிதனுடைய உடலில். தேயரும் உறவினரும் விஷ வைத்தியனை அழைத்து வந்துள்ளனர். அம்பு பாய்ந்து கிடைக்கும் அந்த மனிதன், அவர்களைப் பார்த்து "என்னைக் காயப்படுத்திய அந்த மனிதன் யார்? அவன் எந்த குலத்தைச் சேர்ந்தவன்? அவன் நெட்டையா, குட்டையா, கட்டையா? என்று நான் அறிந்துகொள்வதன் முன்னர், எனக்கு சிகிச்சை செய்ய விடமாட்டேன்" என்று கூறினால்; அவன் சாகத்தானே வேண்டும்?

செயலின் ரகசியங்களை—நடப்பின் காரணங்களை யாரும் முன்னதாக அறிந்துகொள்ள முடியாது. ஆசை, வெறுப்பு முதலியன விடுத்து, தூய அன்பு வாழ்க்கை நடத்துபவனே, மெய்யான இன்பமும், நல்வாழ்வும் பெறுவான்.

அறியாமையால்தான் குழப்பமும், கலக்கமும் ஏற்படுகின்றன. அறியாமை ஒழிந்தால் துக்கத் தொடக்கமும் ஒழியும்.

மனத்தூய்மை, செயல் தூய்மை பெற்று நல்லவனாக வாழ்ந்திடு. கேடானவற்றை நீக்கு. நல்லனசெய் தன்னைச் சுத்தப்படுத்திக் கொள்பவரும், அசுத்தப்படுத்திக் கொள்பவர்களும் அவரவர்களே. பிறர் நம்மைத் தூய்மை படுத்த முடியாது.

நாம் பிறரையும் தூய்மைப்படுத்த முடியாது. விஷத்தைக் கண்டு அஞ்சுவதுபோல், தீமையானவற்றைக் கண்டு அஞ்சி, அவற்றை ஒதுக்கு. பொன்னைத் தீயிலிட்டுக் காய்ச்சித் தூய்மையாக்குவதுபோல், மனிதர்களும் தத்தமது முயற்சியாலும் நடவடிக்கைகளாலும் தம்மைத்தாமே தூய்மைபடுத்திக் கொள்ள வேண்டும்.

நன்னம்பிக்கை கொள்; துக்கமும் துயரமும் உன்னை அணுகாது. நேர்மையாக நட; அண்டாது.

நல்லெண்ணமற்ற இனிப்புப்பேச்சு, மணமற்ற மலரைப் போன்றது.

சுவரப்படுபவன் வீரனல்ல. உன் குறைகளை எடுத்துக் காட்டுபவனே உனக்கு நற்புதையலை கட்டிக் காட்டுபவனாவான். வைரம் வைரத்தை அறுப்பது போல; கேடு செய்வதால் அக்கேடு செய்தவருக்கும் கேடுதான் விளையும்.

நல்ல உடல்வளமே சிறந்த "வரப்பிரசாதம்" மனத்திருப்தியே சிறந்த சொத்து. அன்பே தோழன். அவரவர் செயலே அவரவரை உயர்த்துவதும் தாழ்த்துவதும். அமைதியான, அன்பான, தோழமையான வாழ்க்கை நடத்து. உழைத்துப் பிழை. தேவையான அளவுக்குத் தேடிக்கொள். தேவையானவர்களுக்குத் தேடித்தா. இத்தகையநல்வாழ்க்கையேமெய்யின்பமாகும்.

> எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
> அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு.
>
> —திருவள்ளுவர்

# இதயம்

மலர் 6 | சேலம் 16—11—56 | இதழ் 20

## நல்லுணர்விலே நஞ்சு!

பக்தி முக்கியமா?–பகுத்தறிவு முக்கியமா? பக்தி பெரிதா?–பகுத்தறிவு பெரிதா?

பக்தியே முக்கியம்—அதுவே பெரிது என்பர், பக்தியாலே நாடு நலம் பெறும் என்று சொல்லுகின்ற பழமை விரும்பிகள்.

பகுத்தறிவு முக்கியம்—அதுவே பெரிது, நல்வாழ்வுக்கு ஏற்றது என்போம் பகுத்தறிவு வாதிகளாகிய நாம். கருத்துக்கள் மோதுகின்றன!

பக்திக்கும், பகுத்தறிவுக்கும் நடைபெறுகின்ற இந்தப்போட்டியிலே, காலத்திற்கும், வாழ்வுக்கும் தேவையான பகுத்தறிவு வெல்லுகின்றது. தேவையற்றதான–மடமையின்பாற்பட்டதான பக்தி படுதோல்வியடைகின்றது. இதனைப் பார்த்துப் பதைக்கின்றனர், புண்ணிய காதை புகன்று பக்தி வளர்க்கும் புத்திசாலிகள்!

அவர்களிலே ஒருவரான ராஜாஜி, ''நவம்பர் 11-ம்நாள் 'கல்கி' இதழில் என்னுடைய கருத்து'' என்ற தலைப்பிலே, பகுத்தறிவு தேவையற்ற பக்தர்களுக்கு அபயாஸ்தம் அளிக்கிறார்!

''பக்திக்கும் சமயங்களுக்கும் அடிப்படை ஆதாரமான புண்ணிய கதைகளும், திருவிழாக்களும் எல்லாம் கதை. உருவகம், நீதி போதிக்கும் கற்பனைகள், அவ்வளவே என்று ஒரு சாரார் சொல்ல ஆரம்பித்திருக்கிறார்கள். பகுத்தறிவுக்கும் பக்திக்கும் நடக்கும் போட்டிச் சண்டையில் தோல்விக்கு பயந்து அந்தமாதிரி பேச வந்திருக்கிறார்கள். இதை நான் ஒப்புக்கொள்ள இயலாது இது தோல்வியை ஒப்புக்கொள்வதாகவே முடியும்.''

தோல்வியை நாணயமாக ஒப்புக் கொள்ளுகின்ற நல்லவர்களை நோக்கி ''ஐயயோ! ஆபத்து, தோல்வியை ஒப்புக்கொள்ளாதே, சண்டித்தனம் செய் மூக்கறையான் வேஷம்போடு'' என்கிறார் பக்திவளர்த்து நாட்டைப் பாழாக்கும் பரம்பரையின் தலைவர்! மேலும் அவர் சொல்லுகின்றார்: ராமாயணமும், பாரதமும் வெறும் நீதிக் கதைகள் அல்லவாம். பாரத மக்களுடைய உள்ளங்களை, குயவன் மண்ணிலிருந்து பாண்டம் செய்வதுபோல் பண்பட்ட உயிர்களாக ஆக்கியிருக்கின்றனவாம். சீதையும் ராமனும் லட்சுமணனும் பரதனும் இந்தநாட்டு மண்ணிலிருந்து உண்டாகி உயிர்கொண்டு வாழ்ந்தவர்களாம்!

''ராமாயணமும், பாரதமும் நீதிகளை போதிக்க எழுந்தவை'' என்று கூறிடும் வினோபாஜி, குன்றக்குடியார் போன்றவர்களின் கருத்துக்கள், அவற்றின் தெய்விகத்தை—புண்ணியத்தைப் பாழ்படுத்தி விடுகின்றதாம். பாதுகாக்கப் புறப்படுகின்றார் இந்தப் பஜகோவிந்தம்!

ராமாயணம் பாரதம், பாகவதம் போன்றவை புண்ணிய கதைகள் உண்மையானவை; உயர்ந்தவை. பக்தியென்ற அடிமைமயக்கம் கலந்து அவைகள் பரப்புகின்ற வருணாசிரம தர்மப் பித்தலாட்டங்கள், சமுதாய பேதாபேதங்கள், ஆண்டான் அடிமை முறைகள், மனிதப் பண்பழிக்கும் சோம்பேறித் தத்துவங்கள், சுயமரியாதையற்ற சுரண்டல் சம்பிரதாயங்கள் புனிதமானவை என்று பஞ்சாங்கமும், தர்ப்பையும் ஏந்திப் பிழைக்கும் சவுண்டிப்பார்ப்பனர் சொல்லலாம்; சங்கரரும் சொல்லலாம். சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியாரா சொல்லுவது?

நாட்டின் பிற்போக்கு சக்திகளை மழித்து, பகுத்தறிவு பூர்வமான சமதர்ம சமுதாயத்தை நிர்மாணிக்க வேண்டும்என்ற எழுச்சியும், ஆர்வமும் மக்களிடையே காட்டுத்தீப்போல் பரவிவருகின்றபோது, ராஜாஜியைப் போன்ற தொண்டு கிழவர்கள், அந்த நல்லுணர்விலே நஞ்சினைக் கலப்பது நாட்டுக்கு நல்லதல்ல. அவர்களுக்கும் நல்லதல்ல என்பதே எம்முடைய கருத்து.

—ப. கண்ணன்.




[முன் இதழ் தொடர்ச்சி]

சீலா:- பேசிப் பயனில்லை மகாராணி! வெல்லவேண்டும் பகையை! வேரறுக்க வேண்டும் சதியை!

சங்கா:- அதற்கு என்ன செய்ய வேண்டுமென்கிறீர்?

சீலா:- தக்க நடவடிக்கைகளை இப்பொழுதே எடுக்கவேண்டும். வஞ்சகத்தை வாழ விடக் கூடாது. காட்டிக்கொடுக்கும் கயவர்களைப் பூட்டிவைக்க வேண்டும் சிறைச்சாலையில்.

(ஒரு வீரன் வருகிறான்)

வீரன்:- வணக்கம், மகாராணி!

சங்கா:- என்ன செய்தி?

வீரன்:- இளைய மகாராஜா, தங்களைப் பார்க்க விரும்புகிறார்.

(அமைச்சரும், மகாராணியும் பார்த்துக் கொள்கின்றனர்)

சங்கா:- திருடன் தலையாரியிடமே வருகிறான். நல்லது; வரட்டும்.

(வீரன் செல்ல, சந்திரவர்மன் வருகிறான்)

சந்தி:- வணக்கம் தேவி! விபரீதச் செய்தியொன்று! ஓவியனை நடித்தான்; நமது ஆட்சியைக் கவிழ்க்க சூழ்ச்சி செய்தான் ஒற்றன் மைத்ரேயன்!

சங்கா:- அப்படியா? உண்மையாகவா?

சீலா:- அவர், உமது நண்பராயிற்றே?

சந்தி:- கண்பனைக் கோலமிட்ட நரிக்குட்டி. தேவி! இதோ பாருங்கள், சாளுக்கிய மன்னனின் சதிவோலை! (கொடுத்து) இதைக் கண்டதும், அண்டம் துண்டமாக வெட்டி வீழ்த்தினேன் அந்தவீணனின் உடலை!

சீலா:- கொன்றே விட்டீரோ? நன்று செய்தீர்!

சங்கா:- (படித்து) ஆ! மைத்ரேயன் திட்டப்படி, குருக்கோட்டைப் போர்முனையிலே மன்னவர் வஞ்சகமாய்த் தாக்கப் பட்டிருந்தால்.......

சீலா:- அப்படியொரு திட்டமா? ஆனால், நானறிவேன் நேற்றுவரை மன்னவர் போர்முனைக்கே போகவில்லை.

சந்தி:- போகவில்லையா? ஏன்?

சீலா:- எலியைக் கொல்லுவதற்குப் புலி தேவையில்லை. மன்னவர் களம் புகுமுன்பே பகைவரின் பலம் சரிந்துவிட்டதே!

சங்கா:- என்றாலும், அவர் உடனே அறிய வேண்டும் இந்த சதித் திட்டத்தை.

சீலா:- பாண்டியன் படையெடுப்புச் செய்தியோடு, இதனையும் சேர்த்து இப்பொழுதே அனுப்புகிறேன், மகாராணி!

சந்தி:- (வியந்து) பாண்டியன் படையெடுப்பா? ஏன்? எதற்கு? எப்போது?

சங்கா:- மன்னவரை வீழ்த்தி, உம்மைச் சிங்காதனத்தில் ஏற்ற திட்டப்படி புறப்பட்டு விட்டது பாண்டியன் படை.

சந்தி:- (அஞ்சி) ஆங்! ... அபாண்டம்!

சங்கா:- இல்லை. உமது சதித் திட்டத்தின் அற்புதம்!

சந்தி:- இஃ, ஆதாரமில்லாத குற்றச் சாட்டு.

சங்கா:- பாவம்! உமக்கு வந்த ஓலை உமக்கே கிடைத்திருந்தால், இங்கு வந்தே இருக்கமாட்டீர்! மதிவளம் மிக்க மைத்துனரே! ஓவியன் மைத்ரேயன் சதிக்கு ஆதாரம், சாளுக்கிய மன்னனின் முடங்கல். உமது சதிக்கு ஆதாரம், இதோ பாண்டிய வேந்தனின் முடங்கல். (காட்டுகிறாள்)

சந்தி:- (அஞ்சி) ஆ! ... என்ன!.... என்ன! ... எனக்கொன்றுமே தெரியாதே!

சீலா:- கள்ளனுக்குள் குள்ளன் பாய்ந் தான்; குள்ளன் ஒழிந்து விட்டான்! கள்ளன் கலங்குகின்றான் அகப்பட்டுக்கொண்டு!

சந்தி:- அமைச்சரே! எனக்கும் பேசத் தெரியும்,

சங்கா:- அது எனக்கு நன்றாகத் தெரியுமே! ஆனால், விவாதம் புரிய நேரமில்லை. மைத்துனரே! மைத்ரேயன் சதிக்கு மரண தண்டனை பெற்று விட்டான். உமது சதிக்கு நான் சிறைத் தண்டனை யளிக்கிறேன். மன்னவர் வந்தபிறகு என்னவோ செய்யட்டும். யாரங்கே?

வீரர் இருவர்:- (வந்து வணங்கி) மகாராணி!

சங்கா:- இவரைச் சிறையிலே வையுங்கள்.

வீரர்கள்:- உத்தரவு.

(நலைகவிழ்ந்து நிற்கும் சந்திரவர்மனை இழுத்துச் செல்லுகின்றனர்)

சங்கா:- அமைச்சரே! இந்த இரு சதி ஓலைகளோடு......

சீலா:- இப்பொழுதே மன்னருக்குச் செய்தி யனுப்புகிறேன் மகாராணி!

(ஓலையைத் தர, அவர் வாங்குகிறார்)

## காட்சி 14.

(தைலபனை வென்றடக்கி, வீர முழக்கத்தோடு காஞ்சி நோக்கி வந்து கொண்டிருக்கிறது, நந்தி வர்மனின் படை—நிழற் காட்சி)

(மலைக் காடு. அந்திவேளை, மரங்கள் சூழ்ந்த பகுதியில் தங்கல், மன்னவரும், சேனாபதியும் தனித்திருக்கின்றனர்)

நந்தி:- சேனாபதி! படைவீரர்கள் தங்குவ தற்குரிய வசதிகள் யாவும் செய்து முடித்தீரா?

விக்ர:- செய்துவிட்டேன் மகாராஜா!

நந்தி:- சேனாபதி! தோல்வியடைந்த தைல பன், நமது நிபந்தனைகள் யாவும் அப்படியே ஒப்புக் கொண்டானே; அதன்படி நடப்பானா? நீர் என்ன நினைக்கிறீர்?

விக்ர:- நிச்சயம் நடப்பான் மகாராஜா! போரில் பெருத்த சேதம். நமது பலத்தை நன்றாக உணர்ந்துவிட்டான்.

(ஒரு வீரன் வந்து வணங்குகிறான்)

நந்தி:- காஞ்சியினின்றும் வருகிறாயா? என்ன செய்தி?

வீரன்:- மகாராணியாரின் மூடங்கல். (கொடுக்க)

நந்தி:- (வாங்கிப் பார்த்து) ஆ! இவ்வளவு பெரிய சதியா? எனது ஆட்சியைக் கவிழ்க்கவும் என்னைத் தொலைக்கவுமா? இவ்வளவு துணிவா?

விக்ர:- மகாராஜா! விளங்கவில்லையே!

நந்தி:- குருக்கோட்டைப் போர்முனை யிலேயே என்னைக் கொல்ல ஒரு திட்டமாமே! உமக்கேதேனும் தெரியுமா?

விக்ர:- தாங்கள்தான் போர்க்களத்திற்கே வரவில்லையே!

நந்தி:- வந்திருந்தால் சதி நடந்திருக்குமோ?

விக்ர:- ஒருக்காலும் நடந்திருக்க முடியாது. நானல்லவோ அருகில். தங்களுக்காக எனது உயிரையே கொடுத்திருப்பேனே!

நந்தி:- இது, சாளுக்கிய மைத்ரேயனின் சதி. ஒழிந்தது; ஒழிந்தான். மற்றொன்று: சந் ரவர்மனை மன்னனாக்க காஞ்சியின்மீது படை யெடுத்துள்ளானும் பாண்டியன் சீவல்லபன். சதிகாரப் பயல்கள்! என்ன வேலை செய் கின்றார்கள்!

விக்ர:- விபரீதமாக இருக்கிறதே!

நந்தி:- வினையமாகவும் இருக்கிறது, என் தம்பியின் வஞ்சகம்! சேனாபதி! பாண்டியன் படை, சந்திரவர்மனின் செய்தியை எதிர்பார்த் துக் காத்திருக்கிறது, பெண்ணையாற்றங்கரை யில்! சிறையிலே கிடக்கிறான் அந்த சகோதரத் துரோகி!

விக்ர:- (வியந்து) சிறையிலா? சந்திரவர்மரா?

நந்தி:- ஆம்! கிடக்கட்டும் அவன். நாம் கிடக் கூடாது பகைவரை. இப்படியே பெண்ணையாற் றங்கரை சென்று, பழிபாவத்திற்குப் பரிந்து வந்திருக்கும் பாண்டியன் படையை அழித்து நிர்மூலமாக்கி விட்டுத்தான் காஞ்சி நகர் திரும்ப வேண்டும். நாடறிய வேண்டும்—நயவஞ்சகர் உணரவேண்டும் கழற்சிங்கனின் வல்லமையை! சேனாபதி! நாளை அருணோதயத்திற்கு முன் புறப்படச் சித்தமாகட்டும் நமது படை!

விக்ர:- கட்டளை மகாராஜா!

(வணங்கிச் செல்கிறான்)

நந்தி:- வீரனே! வா, மகாராணிக்கு ஓலை யொன்று தருகிறேன்.

வீரன்:- உத்தரவு.

(மன்னவர் செல்ல, தொடருகிறான் வீரன்)

(வளரும்)

(10-ம் பக்கம் தொடர்ச்சி)

ப. கண்ணனின் வசனங்களுக்காகவும், கல்யாணசுந்தரம், மருதகாசி பாடல்களுக்காகவும், விஸ்வநாதன்—ராமமூர்த்தி இசையமைப்புக்காகவும், சிதம்பரம் செயராமன் கானத்திற்காகவும் பார்த்து மகிழவேண்டிய படம் "பாசவலை"

—க. அண்ணாமலை, சேலம்.

★ ★

பழமைக்கு வக்காலத்து வாங்கிடும் சில நிகழ்ச்சிகள். கருத்துக்கு இனிப்பூட்டும் அழகான பாடல்கள். அறிவுக்கு விருந்தளிக்கும் அருமையான உரையாடல்கள் இவைகள் அத்தனையும் அமையப் பெற்ற சோகச் சுரங்கம்தான் மாடர்ன் தியேட்டர்ஸார் தயாரித்து வெளியிட்டுள்ள "பாசவலை" என்ற திரைக்காவியம்!

காமவெறி பிடித்த புரந்தரன் கன்னிப் பெண் ஒருத்தியைக் கெடுக்க முயல்கிறான். சமயத்தில் காப்பாற்றப்பட்ட அவள், அவள் அண்ணனும், அரசனுமாகிய மகேந்திரனிடம் நீதி வேண்டி வழக்கு தொடுக்கிறாள். அதன் பலனாக மக்களால் மன்னன் புறக்கணிக்கப்படுகிறான். தன் கோல் முறையில் கறைபடிந்ததைக் கண்ட மகேந்திரன் மனந்தாளாது அதைக் கழுவிக்கொள்ள முடிகிறந்து, மனைவி அமுதவல்லியையும் குழந்தைகள் விக்ரமன் பிரதாபன் இருவர்களையும் அழைத்துக்கொண்டு நாட்டைவிட்டகல்கிறான்.

காட்டை அடைந்தபோது, குழந்தைகளின் பசியை தணிக்க மகேந்திரன் கனிபறித்து வர மனைவிமக்களைத் தனியே விட்டுப் பிரிந்து சென்றவன், நச்சுப் பொய்கையில் விஷநீர் அருந்தி மயங்கி விழ்கிறான். மணாளன் வரவிற்காகக் காத்துநின்ற அமுதவல்லி காட்டு மிருகங்களுக்குப் பயந்து, ஆற்றைக் கடக்க முயல்கிறாள். அந்தோ, குழந்தைகள் இக்கரையில் ஒன்றும் அக்கரையில் ஒன்றுமாக ஏங்கிக் கதறி அழ, அமுதம் ஆற்றோடு அடித்துச் செல்லப்படுகிறாள்.

அழகான அன்புக் குடும்பம் அச்சுவேறு ஆணி வேறாகப் பிரிக்கப்பட்டு, பல துன்பங்களைப் பரிசாக அடைந்து இறுதியில் ஒன்று சேருகிறது.

கதை பழமையானது. என்றாலும் அதில் காலத்திற்கேற்ற கருத்து வைரங்களை அங்கங்கே பட்டைதீட்டிப் பளிச்சிடவைக்கிறது "பகுத்தறிவு" சாணைக்கல்! திரு. ப. கண்ணன் அவர்களின் அழகு வசனங்கள் சுவையாக இருக்கின்றன.

திரு. ப. க. அவர்களின் பகுத்தறிவுக் கொள்கைக்கு எதிராக பட அதிபர்களாலோ—மற்றவர்களாலோ சோதனை ஏற்படும்போது, லாகவமாக தப்பிக்கொண்டு "என்லட்சியம் அறியாமை இருளை அகற்றுவதுதான்!" என்று நயம்பட கூறாமல் கூறிவிடுகிறார், சில வசனங்களில்!

மகேந்திரன் தன் தம்பியின் திருந்திய மனதையும் தியாக புத்தியையும், அவன் இன்னும் சிலவினாடிகளில் இறக்கப் போவதையும் கேட்டுக்கதறிடும் கட்டத்திலும், கீதாஞ்சலியிடம் தன் மனைவி அமுதவல்லியின் அன்பையும் பண்பையும் எடுத்துக்கூறி அழுதிடும் போதும், தன் செங்கோல் கறைபடிந்தது என்று கேட்டு குமுறும் கட்டத்திலும் திரு. ப. க. அவர்களின் பண்பட்ட எழுத்துவன்மை நம் இதயங்களை நெருப்பில் காட்டிய மெழுகாக்கி விடுகிறது.

மகேந்திரனாக வரும் எம். கே. ராதா அவர்களின் நடிப்பு மேற்குறிப்பிட்ட இடங்களிலும், பைத்தியமாகமாறி உலகத்தை எள்ளி நகையாடும் கட்டத்திலும், நெருப்பால் வெந்து மடியப் போகும் தன் மனைவி அமுதாவைக் காப்பாற்ற ஓடிவரும் கட்டத்திலும் அபாரமாய் இருக்கிறது.

அமுதாவாக வரும் ஜி. வரலட்சுமியும், கீதாஞ்சலியாக வரும் எம். என். ராஜமும் தன் பாத்திரங்களை நன்றாக உணர்ந்து நடித்திருக்கின்றனர். குமாரி ராஜாமணி கொல்லிப்பாவையாக வருகிறார். சோடை இல்லை.

புரந்தரனாகவரும் வி. கோபாலகிருஷ்ணன் நன்றாக நடித்திருந்தாலும் சில சமயம் நாடகபாணியில் பேசுகிறார்,

மாஸ்டர் பாஜி, வெங்கடேசன் குறை சொல்லமுடியாதபடி நடித்திருக்கின்றனர். நகைச்சுவையளிக்க கருணாநிதியும் முத்துலட்சுமியும் வருகின்றனர். தங்கள் வேலையைச் செவ்வனே செய்துள்ளனர். டைகர் நாயின் நடிப்புமிக அபாரம். காட்சி அமைப்புகள் ஒலி, ஒளி மிக்கநன்று.

## முன்னேற்றப்—
## —பாதையிலே

**சேலம்.**

சென்ட்ரல் டாக்கீசுக்கு எதிரே, தி. மு. க. மாவட்ட அலுவலகக் கட்டிடத்தில், 18-11-56 ஞாயிறு காலை, தேர்தல் நிதி சேர்ப்பதுபற்றி ஆலோசிக்க, சேலம் நகர தி. மு. க. மாணவர் கிளையின் கூட்டம் நடைபெறும். தோழர், வி. சிவப்பிரகாசம் B. A; B. L. தலைமை வகிப்பார். திராவிட மாணவர்கள் திரண்டு வருக.

—சுடர்மணி, செயலாளர்.

---

பாடல்கள் உயிருள்ளவை. இயற்றியவர்கள்: பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், எ. மருதகாசி. ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதத்தில் உயர்ந்து காணப்படுகிறது.

சங்கீதம் அமைத்தவர்கள் விஸ்வநாதன்—ராமமூர்த்தி. இனிமைக்கு கேட்க வேண்டுமா?

"பாசவலை" ஒரு அழகு நிலா. ஆனால், சிறு கறையும் இருக்கிறது. நம்ப முடியாத சம்பவங்கள் இருப்பதால்.

—இரா. அருணாசலம்.
பள்ளவெளி.


தாயகத்திற்கு வெற்றி!
இரண்டேநாட்களில் இருநூறு புத்தகங்கள் விற்பனையாயின!!

முகவுரை — முன்னுரை கிடையாது — அட்டைப்படமில்லை — போர்வையும் போர்த்தப்படவில்லை! ஆனாலும் வெற்றிமுரசு கொட்டுகிறது!

பி. எஸ். பி. ரங்கன் தீட்டிய கருத்தோவியம்.

**தாயகம்** (நாடகம்)

விலை ரூபாய் 1-4-0

கிடைக்குமிடம்:
பகுத்தறிவு அலுவலகம், சேலம்-1

# கேள்விக்கணை

இக்கிழமை பரிசு பெற்றவர்:

● செ. இலக்குவன்,
ஓவியர், போத்தனூர்,
வேலூர்-சேலம்.

டி. பி. பழனிசாமி, தொளசம்பட்டி.

கே: எல்லாவற்றையும் கடந்து நிற்கும் பற்றற்ற கடவுள், ஏன் பனைவி மக்களோடு இன்பமாக வாழவேண்டும்?

ப: கடந்து நிற்கவும், உடைந்து போகவும் அவர் விரும்பினாலும், கல்யாணவிழா நடத்தி, படுக்கையறையில் பாலும் பழமும் வைத்து, இன்பமாக வாழுங்கள் என்று இந்த பக்தர்கள்தானே தொல்லை கொடுக்கிறார்கள்!

*   *   *

கே: பக்திப் பாதையும் அறிவுப் பாதையும் சந்திக்கும்போது உறவு கொள்ளுமா?

ப: அறிவு, மக்களின் கூட்டுறவை விரும்பும். பக்தியோ, பகவானின் பாதார விந்தத்தையே விரும்பும்; உறவு எப்படி மலரும்?

து. ப. மாரியப்பன், துறையூர்.

கே: பெண்ணின் அறிவை எதைக் கொண்டு அளப்பது?

ப: ஆணின் அறிவை அளக்கிடும் கோலே பெண்ணுக்கும் பொருந்தும்.

*   *   *

கே: படத்தொழிலை அரசாங்கத்திற்குச் சொந்தமாக்கினால் என்னவாகும்?

ப: படாதிபதிகள் செய்கின்ற தவறுகளை, அரசாங்கமே செய்யவேண்டிய நிலைமை ஏற்படும்.

அறிவழகன், கொழும்பு-11.

கே: பாரத அரசாங்கத்தில் தமிழர் உரிமைகள் பறிக்கப்பட்டிருக்கின்றனவே; அவர்களை என்ன செய்வது?

ப: பாரதத்தார்களே! உங்கள் எசமானத்துவம் எங்களுக்குத் தேவையில்லை யென்ற முடிவினை, பொதுத் தேர்தலில் காட்ட வேண்டியதுதான்.

முரசுமணி, திருவண்ணாமலை

கே: விதி என்பது என்ன? விதியை வென்றவர் யார்?

'விதி"யைச் சட்டமென்று கூறுவோம்; அதற்குக் கட்டுப்பட வேண்டும். 'தலையெழுத்து' என்பர் வைதிகர்கள். அந்த மடமையை வென்றவர்களிலே ஒருவர் இளங்கோ அடிகள்!

● செ. இலக்குவன், போத்தனூர்,

கே: கலை, கட்சி, காதல் இவை மூன்றும் எத்தன்மைத்து?

ப: கலை, அழகும் சுவையும் நிரம்பியது; கட்சி, கொள்கையும் பணியும் கொண்டது; காதல், இன்பமும் துன்பமும் இணைந்தது.

*   *   *

கே: உலகில் யாரை நம்பலாம்? ஏன்?

ப: நல்ல மனிதரை நம்பலாம்; அவர் நல்ல மனிதராக இருப்பதால்.

க. குருந்நாசலம், காரமடை.

கே: திருமால் மண்ணையும் விண்ணையும் இரண்டடிகளால் அளந்து, மூன்றாவது அடியால் மாபலிச் சக்கரவர்த்தியைக் கொன்றது உண்மையா?

ப: வெறும் கற்பனைக் கதையென்றாலும் விட்டு விடலாமே. தெய்வீகம் கலந்த புராணப் புளுகுதப்பி! நம்பாதே!


## பாரிஸ் அழகிகள்.

கவர்ச்சிமிகுந்த பாரிஸ் யுவதிகளின் இயற்கை அழகை பலவித படுக்கையறைத் தோற்றத்தில் காணவல்ல 36 அசல் போட்டோ படங்கள் ரூ. 10 முன்பணம் அனுப்பினால் தபாற் செலவு இலவசம் சாம்பிள்கள் கிடையாது

வீனஸ் டிரேடிங் கம்பெனி(த ப)
தபால் பெட்டி 1693,
சென்னை-1


(1-ம் பக்கம் தொடர்ச்சி)

கட்சி; ராஜாஜியும், அவரது ஆட்களும் செலித்தால் தமிழனுக்குத் தீங்குநேரும் காமராஜரும் அவரது ஆட்களும் செலித்தால் தமிழனுக்கு நன்மை கிடைக்கும்" என்று புதுமையான பிரசாரம் துவக்கியுள்ளார். எனவே இவரைப் பின்பற்றுவோர் காங்கிரசுக்குள்ளேயே காமராஜர் ஆட்களை ஆதரிக்கவும், ராஜாஜியின் ஆட்களை எதிர்க்கவும் கடமைப் பட்டவர்களாகின்றனர். இப்படியாக கருப்புச் சட்டை, கதர்ச்சட்டைக்குள் நுழைகின்றது!

காமராஜர் பேசுகின்ற காங்கிரஸ் கூட்டத்திலேயே, ராஜாஜியின் கையாள் சுப்ரமணியமும் பேசுகிறார். கலவரமும் நடக்கிறது! காரணம் ஏதாக இருக்க முடியும்?

காமராஜர் வென்றாலும், சுப்ரமணியம் வென்றாலும் அது காங்கிரஸ் வெற்றிதான்; வடநாட்டு அடிமைகளின் வெற்றிதான்; தமிழ்நாடு என்று பெயரிடவும், தமிழனுக்குரிய நிலங்களைப் பெறவும், தமிழ்நாட்டை வளப்படுத்தவும் தகுதியற்றவர்களின் வெற்றிதான் என்பதாகவே தி. மு. க. கருதுகின்றது. கருத்திலே தெளிவு இருக்கின்றது; எனவே கலவரம் தேவையில்லை. எதிர்ப்பினைச் சமாளிப்போம்; பழிகளை, அபாண்டங்களைத் துச்சமென மதிப்போம். தூய்மையோடு தாயகவிடுதலைக்குப் பணியாற்றுவோம் வாருங்கள் தோழர்களே!

—வாலி.

---

உலகிலேயே இன்று நாம் இழிந்த நிலையில் வறுமை வாய்ப்பட்டு உழலுவதற்கும், எடுப்பார் கைப்பிள்ளையாக ஏமாந்து விழிப்பதற்கும் நமது பழைய நாகரிகத்திலுள்ள தீய அம்சமே காரணமாகும்.

—ஜவகர்லால்நேரு.

(2-ம் பக்கம் தொடர்ச்சி)

கொண்டு, மற்றொன்றிலும் 100-க்கு 20 சத விகிதம் தெலுங்குக்குப் போனாலும் மீதி 80 சதவிகிதமாவது தமிழுக்குப் பயன்பட வேண்டுமென்று கோருவது நியாயமான கோரிக்கையென்பதை மறுக்கமுடியாது.

தமிழ்நாட்டில் அமைந்துள்ள சென்னை, திருச்சி இரண்டு நிலையங்களிலும் நிருவாகிகள், நிகழ்ச்சி தயாரிப்பாளர்கள் நியமனத்தில், சென்னை முதல் அமைச்சர் திரு. காமராசரும் கவனம் செலுத்தி, தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கையை நிறைவேற்ற முன்வருவாரென்று நம்புகிறோம்.

குறிப்பு:—

திராவிட கழகத்தலைவர் எனப்படுபவரும் திருச்சி வழக்கறிஞருமான தோழர், தி. பொ. வேதாசலம் அவர்கள் அண்மையில் வெளியிட்ட ஒரு அறிக்கையின் முக்கியப் பகுதி, இது! தமிழை மறந்த வானொலி நிருவாகிகளும், "தமிழ்நாடு" மறந்த ஆளவந்தார்களும் கவனிப்பார்களா? ●

# மொழித்தூய்மை கெடுகிறதே!

பாவலர்—வேலாயுதசாமி

அழகான மொழி, தனித்தியங்கும் தகுதி பெற்ற மொழி, ஏனைய மொழிகட்கெல்லாம் தொன்மை வாய்ந்த தாயமொழி, கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளு ஆகிய நான்மொழிகளை யீன்றெடுத்தும் இளமை நலங் குன்றாத இனியமொழி. சொற்கள் மலிந்தது, எடுக்க எடுக்கக் குறையாத எதுகை மோனை வளங்கொண்டது. கற்பனை யூற்றும், காவியத் திறமையுங் கருத்தினிக்கத் தரவல்ல கற்கண்டு போன்றது, நமது கன்னித் தமிழ்மொழி. மறுப்பாரில்லை; மாற்றியுரைப்பாருமில்லை எனினும்.

முற்காலத்து முதுபெரும் புலவர்கள், நாவலர்கள், பாவலர்கள், தமிழறிஞர்கள் அத்தகு தமிழ்மொழியைக் கற்றுக் கொண்ட எண்ணமும் முறையும் வேறு இக்காலத்திற் கற்றுக் கொண்டதாக நினைத்துக் கொண்டிருக்கும் இளந் தமிழர்களின் எண்ணமும் முறையும் வேறு. அக்காலத்தில் தேனெனத் தித்திக்கும் செந்தமிழ் மொழியின்பால் எழுந்த அளவு கடந்த ஆர்வத்தினால் குற்றங் குறையின்றித் தெள்ளத் தெளியக் கற்க வேண்டுமென்று தக்க ஆசிரியரை யணுகி, அன்பு செலுத்தி ஊக்கத்துடனும், முயற்சியுடனும் கற்றுத் தேர்ந்தார்கள்; கவின்பெறும் பல நூல்கள் எழுதினார்கள்; தமிழன்னையைப் பிழையறப் பேணிவளர்த்துப் பெருமையடைந்தார்கள்.

இக்காலத்திலோ நாவற்றமிழும், பத்திரிகைத் தமிழுமே தமிழ்க் கடலின் இரு கரைகளென எண்ணி ஏமாந்து, புகழும், பெருமையும், பொருளும் விரைவில் அடைய வேண்டுமென்று அவாக்கொண்டு பிழைமலிந்த உரை நடைகளும், கவிதைகளும், பாடல்களும் எழுதத் துணிந்து விட்டார்கள். மொழிக்காகவும், கலைக்காகவும் கற்பதை விடுத்துப் பொருளுக்காகவும், புகழுக்காகவும் கற்கத் தொடங்கியதன் விளைவாக தமிழ்மொழி பல வகையில் சீர்கெட்டுத் திரிந்தும், தனக்குரிய எழில் உருவம் மாறுபட்டும், விகாரத் தோற்றத்திற்குப் போய்க்கொண்டிருக்கிறது.

இந்த நிலை மாறாமல் இப்படியே இருக்குமானால், உலகம் புகழும் உன்னதத் தமிழ்மொழி, எவரும் வெறுக்கும் அளவுக்கு இழிநிலையடைந்து விடுமென அஞ்சவேண்டியிருக்கிறது. சான்றுக்கு சில:— சுவரில், தவற்றை, வெண்ணெய், நிலைமை, அடிமை. இவற்றிற்குப் பதில் சுவற்றில், தவறை, வெண்ணை, நிலமை, அடுமை, இப்படிச் சொற் பிழைகள்.

அவ்வழகிய, நற்றேன், அந்நாள், இவற்றிற்குப் பதில், அவ்அழகிய, நற்தேன், அன்நாள், இப்படிச் சொற்றொடர்ப் பிழைகள்! பலப்பல!

மற்றும், பொருட் பிழைகள்: ர-ற ல—ழ—ள, ன-ண மாறுபாடுகள். வடசொற்கள், ஆங்கிலச் சொற்கள் பெருமளவிற் கலந்து எழுதல் முதலியவைகளால் தமிழுக்குப் பெருந் தீங்கிழைக்கின்றனர். உரைநடையிலேயே இக் கேடென்றால், கவிதையிற் சொல்ல வேண்டுமா? செழித்துப் படர்ந்த பசுங் கொடியில் மலர்ந்து மணம் வீசி அசைந்தாடி அழகு தரும் வண்ணமலரைப் பறித்துப் பிய்த்துக் கசக்கிக் குப்பை மேட்டில் எறிந்துள்ளதைப் போன்று காணப்படுகின்றது! இப்படி மனம் போன போக்கில் எழுதிப் பத்திரிகையாகவும், புத்தகமாகவும் வெளியிடுகின்றனர். இவைகளன்றித் திரைப்படத்தின் பாடல்களோவெனில் பார்க்கக் கண் இடறுகின்றது; சொல்ல வாய் கூசுகின்றது; தமிழ்மொழிதானோவெனஐயமெழுகின்றது. அப்படி அலங்கோலமான நிலைமை. இவைகள், தமிழ் மொழியின் தூய்மையிலும், வளர்ச்சியிலும் அக்கறையுள்ளவர்களுக்குப் பெரிய மன வேதனை தரக்கூடிய செயலாகும். மொழிப்பற்று மிக்க தமிழ்ப் பேரறிஞர்கள் தக்க கவனஞ் செலுத்துவார்களானால் இப்போக்கை மாற்ற முடியாதா? ★


தென்றல் வெளியீடு.

நாடகங்கள்.

ப. கண்ணனின்

| | |
|---|---|
| புரட்சிப்பாடகன் | 1—8—0 |
| வீரவாலி | 1—4—0 |
| கன்னியின்சபதம் | 0—8—0 |
| மின்னொளி | 0—6—0 |

மு. கருணாநிதியின்

| | |
|---|---|
| ஒரே முத்தம் | 1—4—0 |

*

வாணிபர்க்குக் கழிவு உண்டு.

*

தென்றல் நூற்பதிப்புக் கழகம்,
குமாரசாமிப்பட்டி, :: சேலம்-1.

## பாசவலை.

துறந்த பதவி—பிரிந்த குடும்பம் இழந்த கண்கள் இவைகளை திரும்பப்பெற்ற மன்னனின் வாழ்க்கை ஓவியம். 'அலி பாதுஷா' என்னும் முகலாயக் கதையின் அடிச்சுவட்டை பின்னணியாகக் கொண்டு, தமிழர் பண்பாட்டிற்கேற்றவாறு 'பாசவலை'யைப் படமாக்கியிருக்கின்றனர், சேலம் மாடர்ன் தியேட்டர்ஸார்.

''பகுத்தறிவு'' ஆசிரியர் ப.கண்ணன் திரைக்கதை, வசனங்களை எழுதியிருக்கிறார்.

கொள்ளியலை மூலிகைக்குச் சொந்தக்காரியாக சூனியக்காரியை சிருஷ்டித்திருப்பது நன்றாக இல்லை.

''பாலநாகம்மா'' (தெலுங்கு) படத்தில் வரும் 'நாய்' காட்சிகள் வெகுவாக மக்கள் மனதைக் கவர்ந்துவிட்டதாகக்கருதி–நாயின் நன்றியை வெளிப்படுத்தும் விதத்தில்,படமாகிறுல் பாராட்டுதலைப்பெறமுடியுமஎன்று புரந்தரன் நாயாக்கப்படுகிறுன், அந்தக் கட்டம் அறிவுக்கு ஏமாற்றத்தை அளிக்கிறது. காலத்திற்கேற்றதல்ல.

நல்லப்பன்–செல்லம்மா நகைச்சுவை கதையை ஒட்டி வருவது சுவையாக இருக்கிறது. அவர்களிடம் குழந்தை பிரதாபனை வளரவிட்டது மிகப் பொருத்தம்.

வசனம் தென்ளுதமிழ் நடையில், எடுப்பான வார்த்தைகளால் மிடுக்காக அமைக்கப்பட்டிருக்கிறது. குற்றம் குறை கூறமுடியாதபடி வசனங்கள் அளவோடு இருக்கின்றன.

ஆரம்பக் காட்சியிலே உணர்ச்சியை தூண்டும் பேச்சுகள் வருகின்றன–மக்கள் சக்திக்காக மகேந்திரன் முடிதுறக்கும் கட்டத்தில், கருத்து மாரி பொழிகின்றது!

''எம்பெருமான் கிருபை'' நவகோடி நாராயண செட்டியார் பாகத்தில் சுயமரியாதைத்துவங்கள் செறிந்திருக்கின்றன.

சகோதர பாசம்–தாய்ப்பாசம்–மகப்பாசம்–சட்டப் பாசம் போன்ற விளக்கங்கள் முதல்தரம். கலைப்பாசத்தால் அழியும் கிதாஞ்சலியின் பாத்திரம் ஒரு புதுமை!

பாடல்களை ஏ. மருதகாசியும் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரமும் இயற்றியுள்ளனர், உயர்ந்த பொருள் நயத்தோடு சிறப்பாக அமைந்திருக்கின்றன.

'இந்த ஆட்டுக்கும் நம்ம நாட்டுக்கும்' என்ற பாட்டு, நாட்டு நிலைக்கு நல்லதோர் எடுத்துக்காட்டு: 'குட்டி ஆடு தப்பி வந்தால் குள்ளநரிக்குச் சொந்தம்' சிறந்த படிப்பினை. 'ஆகாசவீதியிலே அமைதி கொஞ்சும் நிலவினிலே' நாட்டியக் கலைக்கு உயர்வு. சூனியக்காரிக்கென கொடுக்கப்பட்டிருக்கும் பாடல்களில் விரசம் தட்டுகிறது.

விஸ்வநாதன்–ராமமூர்த்தி இவர்களின் இசையமைப்பின் திறமைபுகழத்தக்கதே தென்னகத்துப்பண்டைஇசைமுறைக்கு பங்கம் வராவண்ணம் செய்திருப்பது வரவேற்கத்தக்கது

சிதம்பரம் சி.எஸ். செயராமன், திருச்சி லோகநாதன், ஜிக்கி, லீலா, கோமளா, ஜமுனாராணி மற்றும் பலர் பின்னணி பாடியிருக்கின்றனர். முன்னணியில் நிற்கின்றனர்.


மகேந்திரன்–எம்.கே. ராதா தனக்கு கொடுக்கப்பட்ட பாகத்தைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார். வி. கே. ராமசாமி 'நந்தகோபன்' பாத்திரம் சிறிது; போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து என்று நடிக்கிறார். ஏ.கருணாநிதி இளைத்தவரல்ல. எஸ் எம். திருப்பதிசாமி திருப்திகரமாக நடிக்கிறார். எம். என் கிருஷ்ணன், சுந்தரராசன், சட்டாம்பிள்ளை வெங்கட்ராமன், ராஜசேகரன் (கணக்குப்பிள்ளை) பரவாயில்லை, புரந்தரன் கோபாலகிருஷ்ணன் எதிர்கால நடிகர். ஜி. வரலட்சுமி அமுதவல்லி பாகத்திற்கு மிக ஏற்றவர். எம். என். ராஜம் ஏ–ஒன்! புதுமுகக் குமாரி ராஜாமணியும் தேவலாம்! டி. பி. முத்துலட்சுமி தனக்கே உரித்தான பாணியில் வருகிறார். நகைச்சுவை தருகிறார்.

டைரக்ஷன் ஏ. எஸ். நாகராஜன் கலைநுட்பங்களை தெளிவுறக் காட்டவும், புதுமைகளைப் புகுத்தவும், ஏனோ தவறிவிட்டார்.

ஒலி, ஒளிப்பதிவு தரமாக உள்ளன.

(7-ம் பக்கம் பார்க்க)

வெண்சங்கு சீயக்காய் தூள் எங்கும் கிடைக்கும்



எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த

செல்வம் ராணி & சேகர் ஊதுபத்திகளை

வாங்கி உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்:

வெண்சங்கு சீயக்காய்த்தூள் தொழிற்சாலை,
3037–38, டபீர் குளம் ரோடு, தஞ்சாவூர்.

சலகண்டபுரம் செந்தமிழ் அச்சுக்கூடத்தில், ஆசிரியர், ப. கண்ணனால் அச்சிடப்பட்டு;
சேலம்–1 குமாரசாமிப்பட்டியினின்றும் வெளியிடப்படுகிறது.